**புதிய களனி பாலத்திலிருந்து அத்துருகிரிய வரையான உயர்த்திய நெடுஞ்சாலைச் செயற்திட்டம் - 2020**

---

புதிய களனி பாலத்திலிருந்து அத்துருகிரிய வரையான உயர்த்திய நெடுஞ்சாலைச் செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. நாட்டின் நிதி மற்றும் நிர்வாக தலை நகரங்களிலுள்ள பாரிய போக்குவரத்து நெரிசலினை எளிதாக்குதல் மற்றும் சேவை வழங்களினை அதிகரிப்பதற்காக கொழும்பு கோட்டையினை துறைமுக நகரம், கொழும்பு துறைமுகம்இ மாலபே கல்வி வலையம் மற்றும் பத்தரமுல்லை நிர்வாக மையம் உள்ளடங்களாக ஏற்கனவேயுள்ள அதிவேகப்பாதை வலையமைப்புடன் இணைப்பதனூடாக அதிவேகப்பாதை வலையமைப்பின் இணைப்பினை அதிகரித்தல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோல்கலாகும். செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 193 பில்லியனானதுடன் பிரதான அடிச்சுவட்டின் அண்ணளவான நீளம் 16.4 கி.மீ ஆகும். முன்மொழியப்பட்ட செயற்திட்டமானது பொது தனியார் பங்குடமையாக (பிபிபி) வடிவமைத்தல்-நிர்மானித்தல்-பராமரித்தல் மற்றும் மாற்றுதல் (டீபீஎப்ஓஎம்டி) எனும் அடிப்படையில் அமுல்படுத்தவேண்டியதுடன் 2025 இல் 3 வருடங்களிற்குள் பூர்த்திசெய்ய பட்டியலிடப்பட்டிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 பௌதீக செயலாற்றல்

### 2.1 செயற்றிட்ட செயற்பாடுகளின் பௌதீக செயலாற்றல்

செயற்திட்டமானது 2016 இல் அதன் நடவடிக்கைகளை ஆரம்பித்ததுடன் 2015 கட்டம் I இன் (புதிய களனி பாலம் தொடக்கம் ராஜகிரிய வரையான 6.9 கி.மீ) சாத்தியவள கற்கை கொழும்பு செயற்திட்டத்திலிருந்தான (எஸ்எச்ஈடிசீபி) தெற்கு அதிவேக இடமாறலின் வேலைப்பரப்பின் கீழ் பூர்த்திசெய்யப்பட்டிருந்தும் கட்டம் II இன் (ராஜகிரிய தொடக்கம் அத்துருகிரிய) சாத்திவள கற்கை பூரத்திசெய்யப்பட்டு ஆரம்பத்தில் உடன்பட்ட காலத்திலிருந்து 294 நாட்கள் தாமதத்துடன் 2019 ஓகஸ்ட் 22 இல் செயற்திட்டத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. மேலும், கட்டம் II இற்கான சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீட்டு அறிக்கை (ஈஐஏ) 2021 செப்தம்பர் 30 இல் உள்ளவாறு கூட சுற்றாடல் பாதுகாப்பு பிரிவினூடாக (ஈபிஏ) நெடுஞ்சாலை அடிச்சுவடு செல்வதன் காரணமாக மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் அனுமதிக்கப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

### 2.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|
| போட்டி விலை கூறல் செயன்முறைகளின் கீழ் செயற்திட்டத்திற்கான முதலீட்டாளர்களை தெரிவு செய்வதற்கு 2016 இல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தும், அது 2020 மே 06 ஆம் திகதிய அமைச்சரவை அமைச்சர்களின் தீர்மானத்தின் பிரகாரம் 4 வருடங்களின் பின்னர் ரத்து செய்யப்பட்டிருந்ததுடன் சீனா துறைமுக பொறியியலாளர் கம்பனி லிமிடட் உடன் இணைந்து வேலை செய்ய நெடுஞ்சாலைகள் அமைச்சிற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும், எவ்வித முதலீட்டாளர்களும் 2021 செப்தம்பர் 30 இல் உள்ளவாறு கூட செயற்திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | அமைச்சரவையானது முன்மொழிவுகளை மதிப்பிட்டு கட்டமைத்து அமைச்சரவை அமைச்சர்களிற்கு பரிந்துரைகளை சமர்ப்பிக்க இணக்கப்பாட்டு குழு மற்றும் செயற்திட்ட குழுவினை நியமித்திருக்கின்றது. | இலக்கிடப்பட்ட திகதிகளில் நடவடிக்கைகளை தாமதமின்றி செயற்திட்டத்திற்கான முதலீட்டாளர்களை தெரிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 2.3 காணி சுவீகரிப்பு மற்றும் மீள வழங்கள் மீதான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|
| தகவல்களின் பிரகாரம், செயற்திட்டத்தினால் கொள்வனவு செய்யப்படவேண்டிய மொத்த காணித்துண்டுகள் 2035 ஆகவிருந்தது. அதில் 1136 அரச காணித்துண்டுகள் உள்ளடங்களாக 1214 காணித்துண்டகள் புதிய களனி பாலம் தொடக்கம் ராஜகிரிய வரையான பிரிவிற்கு கொள்வனவு | செயற்திட்டத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட மொத்த காணித்துண்டுகள் 2035 ஆகும் அதில், 1136 அரச காணித்துண்டுகள் உள்ளடங்களாக 1214 காணித்துண்டுகள் புதிய களனிப்பாலம் தொடக்கம் ராஜகிரிய வரையான பிரிவின் மீது கொள்வனவு செய்யவேண்டியிருந்தது. அதேநேரம் | இலக்கிடப்பட்ட திகதிகளில் காணிசுவீகரிப்பு நடவடிக்கைகளை பூர்த்திசெய்ய பிரதேசசெயலகங்கள், நிளஅளவைதிணைக்களம் மற்றும் மதிப்பீட்டு திணைக்களத்துடன் முறையான ஒருங்கிணைப்பை |

| | | |
|---|---|---|
| செய்யப்படவேண்டியிருந்த அதேநேரம் ராஜகிரிய தொடக்கம் அத்துருகிரிய பிரிவிற்கு அரசகாணிகள் உள்ளடங்களாக 821 காணித்துண்டுகள் கொள்வனவு செய்யவேண்டியிருந்தது. புதிய களனி பாலம் தொடக்கம் ராஜகிரிய வரையான பிரிவின் மீதான 1214 காணித்துண்டுகளிற்காக 38(அ) பிரிவு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்தும், பிரிவு 17 இன் கீழான இழப்பீடு 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட எவ்வித துண்டுகளிற்கும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், புதிய களனிப்பாலம் தொடக்கம் ராஜகிரிய வரையான பகுதி மற்றும் ராஜகிரிய தொடக்கம் அத்துருகிரிய வரையான பிரிவு போன்றவற்றிற்கான காணிசுவீகரிப்பு நடவடிக்கைகளின் பௌதீக செயலாற்றல் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு முறையே 65 சதவீதம் மற்றும் 3 சதவீதமாகவிருக்கின்றது. | ராஜகிரிய அத்துருகிரிய பிரிவிற்காக 821 காணித்துண்டுகள் கொள்வனவு செய்யவேண்டியிருந்தது. 2020 இல் முடிவுற்ற ஆண்டிற்காக புதிய களனிப்பாலம் தொடக்கம் ராஜகிரிய வரையான பிரிவு மற்றும் ராஜகிரிய தொடக்கம் அத்துருகிரிய வரையான பிரிவு என்பவற்றின் பௌதீக செயலாற்றல் முறையே 55 சதவீதம் மற்றும் 3 சதவீதமாக காணப்பட்டது. | வைத்திருத்தல் வேண்டும். |

## 2.4 மனிதவள முகமைத்துவத்துடன் தொடர்புபட்ட விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|
| செயற்திட்டத்தின் அனுமதிக்கப்பட்ட ஆளணி 12 உத்தியோகத்தர்களாகும். இருப்பினும், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு தொழிநுட்ப ஒத்தியோகத்தர் மாத்திரமே செயற்திட்டத்தினால் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தார். | முகாமைத்துவ சேவைகள் திணைக்களமானது செயற்திட்டத்திற்காக உள்ளக கணக்காய்வு பதவி உள்ளடங்களாக 20 பதவிகளிற்கான 35 ஆளணி பிரிவுகளை அனுமதித்திருந்தது. அனுமதிக்கப்பட்ட 35 ஆளணிகளில், 28 பதவிகள் 2021 ஒக்டோபர் 31 வரை நிரப்பப்பட்டிருந்தது. | நேர அடிப்படையில் செயற்திட்ட நடவடிக்கைகளை தாமதமின்றி செய்ய தேவையான உத்தியோகத்தர்களை ஆட்சேர்க்கவும் இலக்கிடப்பட்ட திகதியில் செயற்திட்ட வேலைகளை பூர்த்தி செய்யவும் செயற்திட்டத்தினால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |